DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.2/2026**

Prosecution witness **PW.7 (LW.9)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Vinothini | Caste | : | |
| Father Name | : | Sivasubramanian | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 32 |
| Time | : | | | | |

**(Accused absent. Petition filed and allowed. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **22.06.2026**

**22.06.2026 முதல் விசாரணை** :

நான் தற்போது உதகை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவு மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.10.2025 ம் தேதியன்று நான் மேற்படி மருத்துவமனையில் பணியிலிருந்த போது மாலை 05.30 மணிக்கு பிரவீன்குமார் என்ற 24 வயதுள்ள நபரை அவருடன் வேலை செய்யும் மவுலி என்பவர் சிகிச்சைக்காக என்னிடம் அழைத்து வந்தார். அவரை விசாரித்த போது அவர் 10.10.2025 ம் தேதி மதியம் 02.30 மணியளவில் தன்னை தனக்கு தெரிந்த ஒரு நபர் கேத்தி அருகில் வைத்து மரக்கட்டை மற்றும் வேறு பொருட்களால் தாக்கியதாக கூறினார்.

அவரை பரிசோதித்ததில் அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் இருந்தது.

1. வலது கை மணிக்கட்டில் ஒரு வீக்க காயம் இருந்தது.
2. மூக்கில் வலி இருந்ததாக கூறினார்.
3. வலது கையில் மோதிர விரல் மற்றும் சுண்டுவிரலில் சிராய்ப்பு காயம் இருந்தது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சையளிக்கப்பட்டது. அவருக்கு வலது கை மணிக்கட்டில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும், மற்ற காயங்கள் சாதாரண காயங்கள் என்றும் கருத்துரை வழங்கி சான்றிதழ்

வழங்கினேன். நோயாளிக்கு விபத்து பதிவேடு தயாரித்த போது அவர் அவருக்கு இடது தலையில் இருந்த வீக்க காயத்தை கூறவில்லை (**அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.5 ஆகவும், காயச்சான்றிதழ் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**), இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை 23.10.2025ம் தேதியில் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்த போது விபத்து பதிவேட்டில் உள்ள விவரத்தை கூறினேன் என்றால் சரிதான். காயச்சான்றிதழில் உள்ள விவரத்தை விபத்து பதிவேட்டில் கூறவில்லை என்றால் ஒரு காயம் குறித்து மட்டும் கூறவில்லை. மேற்படி காயங்கள் கீழே தடுக்கிவிட்டு விழும் போது கூட ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். காயம்பட்டவர் பொய்யாக கூறியதை வைத்து நான் காயச்சான்றிதழ் வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> **–** இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.